**செய்தி வெளியீடு எண்: 301** **நாள்: 29.05.2019**

## செய்தி வெளியீடு

TNPL 31 மார்ச் 2019 அன்று முடிந்த காலாண்டின் மொத்த வருவாய் ரூ.1059 கோடியாகும். இது கடந்த ஆண்டு இதற்கு இணையான காலாண்டில் ரூ.1062 கோடியாக இருந்தது.

இந்த காலாண்டில் விதிவிலக்குபெற்ற இனங்களுக்கும் வரிக்கும் முந்தைய இலாபம் ரூ.100.14 கோடி ஆகும். இது கடந்த ஆண்டு இதே காலாண்டில் ரூ.57.65 கோடியாக இருந்தது.

விதிவிலக்கு பெற்ற இனங்களின் கீழ் கரும்புச்சக்கை கொள்முதல் செய்வதற்காக இருப்பாகவும் முன்பணமாகவும் கொடுக்கப்பட்டு திரும்பவராத ரூ.73.19 கோடி சந்தேகத்திற்குரிய வராக்கடனாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 31 மார்ச் 2019 அன்று முடிந்த காலாண்டில் வரிக்கு முன்பும், விதிவிலக்கு பெற்ற இனங்களுக்கு பிறகான இலாபம் ரூ.26.95 கோடியாக உள்ளது. இது கடந்த ஆண்டு இதற்கு இணையான காலாண்டில் ரூ.57.65 கோடியாக இருந்தது. ரூ.56.46 கோடியை தேய்மானத்திற்காகவும், மற்றும் ரூ.56.09 கோடியை நிதி செலவினமாகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வரிக்கு பிறகான இலாபம் 31 மார்ச் 2019 அன்று முடிவடைந்த காலாண்டிற்கு ரூ.13.49 கோடியாக உள்ளது.

இந்த ஆண்டின் மொத்த வருவாய் ரூ.4121.95 கோடி, கடந்த ஆண்டின் மொத்த வருவாய் ரூ.3158.70 கோடியை விட இது 30 சதவிகிதம் அதிகமாகும். வரிக்கும் விதிவிலக்கு பெற்ற இனங்களுக்கும் பிறகான இலாபம் ரூ.228.39 கோடியாகும். இது கடந்த ஆண்டு ரூ.27.99 கோடி நட்டமாக இருந்தது. வரிக்கு முன்பும் விதிவிலக்கு பெற்ற இனங்களுக்கு பிறகுமான இலாபம் ரூ.155.20 கோடியாகும். இந்த ஆண்டு ரூ.226.68 கோடியை தேய்மானத்திற்காகவும், ரூ.233.36 கோடியை நிதி செலவினத்திற்காகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு அடைந்த ரூ.42.5 கோடி நட்டத்திற்கு பதிலாக இந்த ஆண்டு ரூ.94.34 கோடி இலாபமாக பெறப்பட்டுள்ளது.

31 மார்ச் 2019 ஆண்டு முடிவடைந்த நிதி ஆண்டில் காகித உற்பத்தி முந்தைய ஆண்டை விட 22 சதவிகிதம் கூடி 4,32,572 MT ஆக அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டில் 1,41,851 MT ஆக இருந்த காகித அட்டை உற்பத்தி இந்த ஆண்டு 1,76,997 MT ஆக அதிகரித்துள்ளது.

31 மார்ச் 2019 முடிவடைந்த நிதி ஆண்டின் விற்பனை காகிதத்தில் 4,45,389 MT ஆகவும், காகித அட்டையில் 1,77,047 MT ஆகவும் உயர்ந்துள்ளது.

இயக்குநர்களின் குழு 2018–19 இல் நிதி ஆண்டிற்கான ஈவுத் தொகையாக பங்கொன்றிற்கு ரூ.7.50 என அறிவித்துள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**